1990 சனவரி 22]

திரு. டி. சி. விஜயேந்திரையா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில்..... (மணியடிக்கப்பெற்றது).

மணி 9.25

திரு மா. சுந்தரதாஸ் ; பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தைப் பொறுத்த வரையில் எத்தனை நீதிமன்றங்களிலே பார் அசோசியேஷன் பில்டிங் கூட இல்லாமல் இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? நான் பிராக்டிஸ் செய்கின்ற குழித்துறை நீதிமன்றத்திலே பார் அசோசியேஷன் இல்லை. சேம்பர் பற்றிக் கேள்வி இருக்கிறது. பார் அசோசியேஷன் இருப்பதற்கு இட வசதி செய்வதற்கு, அதற்கு நிதி ஆதாரம் இல்லை என்று சொன்னால் வாடகைக்காவது பார் அசோசியேஷன் பில்டிங் எடுத்துக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா ; தலைவரவர்களே, என்னிடத்திலே இப்பொழுது விவரம் இல்லை. குழித்துறையில் இருக்கின்ற நிலைமை பற்றி எனக்குத் தெரியாது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் அங்கே பிராக்டிஸ் செய்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஒவ்வொரு நீதிமன்றத்திலும் ஒரு பார் ரூம் இருக்கும். பார் அசோசியேஷன் இருக்கத்தான் செய்யும். எப்படி இல்லை என்று தெரியவில்லை. ஒரு வேளை அதை ஏற்பாடு செய்யவில்லையோ என்னவோ தெரியவில்லை. அது பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, பத்து நாட்களாக வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தைப் புறக்கணித்தும், உண்ணா நோன்பு இருந்தும் தங்களுடைய.........(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வேறு, இடைச் செருகல் வேண்டாம். இதை ஏற்கெனவே கொடுத்திருக்கிறீர்கள், நான் மறுத்திருக்கிறேன்.

சென்னை உயர்நீதி மன்றத்தின் பெயர் மாற்றம்.

*4934 திரு. துரை சந்திரசேகரன்,
பேராசிரியர் கே. பொன்னுசாமி,
திரு. கே. அர்ஜுனன்

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை உயர்நீதி மன்றத்தினை தமிழ்நாடு உயர் நீதிமன்றம் எனப் பெயர் மாற்றம் செய்ய மாநில அரசு மைய அரசுக்குக் கோரிக்கை அனுப்பி உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) :

ஆகஸ்டு 1983-ல் சென்னை உயர்நீதி மன்றத்தினை தமிழ் நாடு உயர்நீதி மன்றம் எனப் பெயர் மாற்றம் செய்ய, தக்க சட்டமியற்றும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாநில அரசு மைய அரசை கேட்டுக் கொண்டது. சென்னை உயர்நீதிமன்றம் இப்பெயர் மாற்றத்தை விரும்பாததால் உயர்நீதிமன்றத்தின் கருத்தை மீண்டும் அறிந்து தெரிவிக்குமாறு மைய அரசு கேட்டுக் கொண்டது. அதன்படி சென்னை உயர் நீதிமன்றத்தின்கருத்து கோரப்பட்டது. மார்ச் 1988-ல், பெயர் மாற்றம் செய்வதற்கான காரணம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை என்று உயர் நீதிமன்றம் திட்டவட்டமாக அறிவித்து விட்டது. எனவே சென்னை உயர்நீதிமன்றம் என்றே தொடர்ந்து இருக்கலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அண்ணாவின் தலைமையில் அமைந்த அரசு சென்னை மாகாணத்தைத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்ததைப் போல தமிழ் நாட்டிற்குத் தலைமை நீதிமன்றமாக இருக்கின்ற உயர்நீதிமன்றத்தைக் கண்டிப்பாகத் தமிழ்நாடு உயர்நீதி மன்றம் என்று மாற்றுவதற்கு அரசு அனைத்து முயற்சிகளையும் செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, பம்பாய், கல்கத்தா, அலகாபாத், பாட்னா ஆகிய நீதிமன்றங்களில் அந்தத் தலைநகரத்திலே இருக்கக் கூடிய பெயரிலேயே இயங்குகின்றன. குறிப்பாக, சென்னை, கல்கத்தா—வங்காளம் ஆகிய நீதிமன்றங்கள்—உயர் நீதிமன்றங்கள் 1861 - வது ஆண்டு சார்ட்டர் ஆக்ட்படி அமைக்கப்பட்டது. 1935 ஆம் ஆண்டுச் சட்டத்தில் 5 நீதி மன்றங்கள் அமைக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து இன்றைக்கும் அந்த நீதிமன்றங்கள்—சென்னை, பம்பாய், கல்கத்தா, அலகாபாத், பாட்னா ஆகிய ஹைகோர்ட்டுகள் அந்தப் பெயராலேயே இப்பொழுதும் இருந்து வருகின்றன. மேலும், இப்பொழுது சென்னை உயர்நீதிமன்றம் தமிழ் மாநிலத்திற்கும், பாண்டிச்சேரிக்கும் சேர்த்து இயங்குகிறது. எனவே, இதைப் பற்றி கருத்து அறிவிக்கும்படி கேட்டபொழுது உயர்நீதிமன்றம் 1983-ம் ஆண்டிலேயும், 1988-ம் ஆண்டிலேயும் ஏற்கெனவே இருக்கின்ற பெயரிலேயே இருக்கவேண்டுமென்று செய் திருக்கிறார்கள். எனவேதான் இப்பொழுது சென்னை உயர்நீதிமன்றம், Highcourt of Judicature Madras என்றுதான் சொல்லப்படுகிறது. இந்தக் கருத்தை மத்திய அரசுக்கு நாம் தெரிவித்தும் கூட—மத்திய அரசுதான் சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். சட்டத் திருத்தந்தைக் கோரிய பொழுது

1990 சனவரி 22]

நீதிமன்றத்தினுடைய கருத்தைக் கேட்டோம்.—உயர்நீதிமன்றம் ஒப்புக் கொள்ளாத காரணத்தினாலே, இப்பொழுது அந்தக் கருத்து நிறைவேறுவதற்கான வாய்ப்பு இல்லை.

பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை இராஜதானி, சென்னை மாகாணம என்றெல்லாம் இருந்ததைத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் போல, இந்த மன்றத்தில் இந்த நீதிமன்றத்தின் பெயரை மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை தீர்மான வடிவிலே எடுக்கப்பட செயற் குறிப்பு அரசிடத்திலே இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இராஜ்யம் என்பதை நாடு என்று மாற்றவும், சென்னை என்ற ஒரு தலைநகரத்தினுடைய பெயரை நாட்டுக்கு வைக்கத் தேவையில்லை என்பதற்காகவும், சென்னை இராஜ்யம் என்று வழங்கி வந்த பெயர், இந்த மண்ணின் பெயரால் தமிழ்நாடு என்று வழங்க வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டு, இங்கே தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதை மத்திய அரசும் ஏற்றுக் கொண்டது.

9-30 மணி

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல சென்னை, பம்பாய், கல்கத்தா, அலகாபாத் போன்ற தலைநகரங்களில் இருக்கிற நீதிமன்றங்களுடைய பெயர்களை அந்தந்த மாநிலத்தின் பெயரால் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. சென்னை என்பதும் தமிழ்ப் பெயர் தான்.

திரு. கே. அர்ஜுனன்; பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதியாக ஒரு தமிழரே இருக்க வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்று............(மணியடிக்கப்பெற்றது).

திரு. வே. தங்கபாண்டியன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதி மன்றத்தினுடைய ஒரு பிரிவை மதுரையில் அமைக்க வேண்டுமென்ற நீண்ட நாள் விருப்பத்தை ....(மணியடிக்கப்பெற்றது).